[1972 சனவரி 25

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்காக அமைக்கப்பட்டுள்ள மத்தியக் குழு, 'தகுதி' என்று கருதுகிற நேரங்களில் காவல்துறைப் பணியாளர்களுடைய பொது நலனுக்காக அந்த நிதியை வழங்கும்.

காவல்துறையில் முஸ்லீம்கள்

***33 வினா—திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போலீஸ் துறையில் முஸ்லீம்களுக்கு எத்தனை சதவீதம் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காவல்துறையின் எல்லாப் பதவித்தரங்களையும் கருதிப்பார்க்கையில் முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம் அந்தத் துறையில் 4.04 சதவீதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, இப்படி முஸ்லிம் சமுதாயத்திற்கு இன்னும் அதிகப்படியான பிரதிநிதித்துவம் போலீஸ் துறையில் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதுவும், பரந்த மனப்பான்மை கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சரவர்களிடம் அந்தத் துறை இருக்கின்ற காரணத்தினால் இன்னும் அதிகமானதொரு பிரதிநிதித்துவத்தை அந்தச் சமுதாயத்திற்கு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முஸ்லிம்கள் என்று பார்த்து மத அடிப்படையில் இவைகளை அமைக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் நன்றாக அறிவார்கள். ஆனாலும், பின்தங்கியவர்களுக்குச் சலுகைகளை அளிப்பது என்ற வகையில் 25 சதவீதம் என்பதை 31 சதவீதமாக ஆக்கியிருக்கிறோம். அந்த அடிப்படையில் பின்தங்கிய முஸ்லிம்களுக்கு இடங்கள் வழங்கப்படுவதற்கு இந்த அரசு எல்லாவகையான ஆதரவையும் தரும்.

திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு முதல்வரவர்கள் பதில் கூறும்போது முஸ்லிம்களுக்கு காவல்துறையில் 4.04 சதவீதம் பிரதிநிதித்துவம் கொடுத்து இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்த 4.04 சதவீதம் என்பது, தமிழ்நாட்டின் மொத்த மக்கட்தொகையில் முஸ்லிம் சமுதாயத்தினரில் இது எத்தனை சதவீதம் என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாட்டினுடைய மொத்த மக்கட்தொகையில் 1971-ஆம் ஆண்டுக் கணக்குப்படி முஸ்லிம் மக்களின் தொகை 21,05,053 ஆகும். இது தமிழ்

1972 சனவரி 25]

நாட்டின் மொத்த மக்கட்தொகையில் 5.11 சதவீதம்மாகும். காவல்துறையில் மாத்திரம் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் தரப்பட்டிருப்பது 4.04 சத வீதம் ஆகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஸப்-இன்ஸ்பெக்டர் பதவிக்கு மேலாக உள்ள அதிகாரிகள் பதவிக்கு முஸ்லிம் மக்கள் எத்தனை சதவீதம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்னிடத்தில் உள்ள விவரப்படி, காவல்துறையில் முஸ்லிம் மக்கள் 4.04 சத வீதம்; காவல் துறை நிர்வாகப் பதவியில் (எக்ஸிக்யூடிவ் சர்வீஸ்) 4.06 சதவீதம்; எழுத்துப் பணிப் பதவிகளில் (மினிஸ்ட்டீரியல் சர்வீஸ்) 4.04 சதவீதம்.

திரு. ஆ. பரந்தாமன் : இப்படி காவல் துறையில் கொடுக்கப்படுகின்ற பிரதிநிதித்துவம் மத அடிப்படையில் இல்லாமல், தகுதியின் அடிப்படையில் கொடுப்பதற்கு அரசு ஏதாவது உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஏற்கனவே அதற்குப் பதில் கூறிவிட்டேன்.

முதியோர் உதவித் தொகை

*** 34 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் உதவித் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. சு. துரைசாமி : முதியோருக்குக் கொடுக்கும் உதவித் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, இப்பொழுது கொடுக்கப்படும் உதவித் தொகையோடு இன்னும் ஒரு பத்து ரூபாய் சேர்த்துக்கொடுத்தால் எவ்வளவு செலவு ஏற்படும் என்று தெரிவிக்க முடியுமா ? அப்படி பத்து ரூபாய் உயர்த்திக் கொடுக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே ஆண்டொன்றுக்கு முதியோர் உதவித் தொகை என்ற வகையில் ஒரு கோடி ரூபாய் அரசுக்கு செலவாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் அதை அதிகப்படுத்துவது இப்பொழுது இயலாத காரியமாக உள்ளது.